3rd August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : இதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யலாம்.

மதுவிலக்கு வழக்குகள்

* 48 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும், மதுவிலக்கு கேஸ்கள் (Headwar statement) வாரத்திற்கு எத்தனை என்று கேட்கப் படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : துப்புதுலக்கப்பட்ட வழக்குகள் பற்றிய வார, அல்லது மாத அறிக்கைகள் போலீஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு போலீஸ் சூப்பிரண்டுகளால் ஆய்வு செய்யப்படுகின்றன. வாரத்திற்கு இத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்கிற அளவு எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு வாரத்திற்கு இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று சொல்லி, அப்படிப் போடாதவர்களுக்கு பனிஷ்மெண்டு கொடுத்திருக்கிறார்களே, அந்த பனிஷ்மென்டைப்பற்றிய குறிப்பை எழுதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினால், அத்தனையையும் 'வித்டிரா' செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is a hypothetical question. Let the hon. Member please send it first and then ask what action was taken on it.

பசுக் கொலைத் தடுப்பு

* 49 **கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில், பசுக்களைக் கொலை செய்வதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் பிறப்பிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : தமிழ்நாட்டில் பசுக்கொலையைத் தடுக்கச் சட்டம் இயற்றுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

Food-rationing

* 50 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the quantum of food-ration to manual workers in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

[3rd August 1966

திரு. வை. சங்கரன் : ராஜ்யத்தில் உடல் உழைப்பு வேலை செய்பவர்களுக்கு உணவின் அளவை சற்று அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அதை மனத்தில் கொண்டு அரசாங்கம் இந்த அளவை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த அளவை உயர்த்துவதற்கு இப்பொழுது ஆலோசனை இல்லை. அவர்களுக்குக் கொஞ்சம் கூடவே கொடுக்கிறோம்.

* 51 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதியில் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில், நமது மாநிலத்திற்கு ஏழு அவுன்சு அரிசிதான் கொடுக்கவேண்டும் என்ற முடிவை நமது அரசாங்கம் ஒத்துக்கொண்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வயது வந்தவர்களுக்குப் பங்கீட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் அளவு 200 கிராமுக்கு மேல் இருக்காது. இந்த அளவு ஒரு வாரத்திற்குத் தோராயமாக ஏழு அவுன்சு இருக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, அகில இந்தியாவுக்கும் ஏழு அவுன்ஸ் முறை என்று அந்த மகாநாட்டில் பேசப்பட்டதா ? அப்படிப் பேசப்பட்டிருந்தால், நமது மாகாணத்திற்கு ஏழு அவுன்ஸ் போதுமா? அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ததா? போதாததற்கு என்ன நடவடிக்கை எடுத்தது?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஏழு அவுன்ஸ் மட்டும் அல்ல. கோதுமையும் மற்ற பொருள்களும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : பங்கீட்டுமுறை இருக்கும் மாவட்டங்களில் நெல் உற்பத்தி ஆகக் கூடிய மாவட்டங்களுக்கும் ஏழு அவுன்சு கொடுப்பது போல் உற்பத்தி ஆகாத மாவட்டங்களுக்கும், அதாவது என்னுடைய நீலகிரி ஜில்லாவுக்கும் ஏழு அவுன்ஸ் கொடுக்கப்படுகிறது. எங்களுக்கு மார்க்கெட்டில் அரிசி கிடைக்காத காரணத்தினால், அந்த மாதிரி நெல் விளையாத மாவட்டங்களுக்கு உணவின் அளவை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கோதுமை, மைதா போன்ற மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : மற்ற உணவுப் பொருள்கள் கொடுத்தாலும் கூட, நெல் விளையக்கூடிய ஜில்லாவுக்கும், நெல் விளையாத ஜில்லாவுக்கும் ஒரே மாதிரியாக விநியோகம் செய்வது சரியல்ல, நெல் விளையாத இடங்களில் உணவுப் பொருளின் அளவை சற்று உயர்த்திக்கொடுப்பதற்கு ஏன் தயக்கம் இருக்கிறது?